# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**12.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. பள்ளிகளில் 'தி ரெட் பலூன்' குறும்படம்

- மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது வாரமும் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் **ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு** வரையில் பயிலும் மாணவர்களுக்கு அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாட வேலைகளில் சிறார் திரைப்படங்கள் திரையிட ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது.
- அந்த வகையில் அக்டோபர் 13ஆம் தேதி **'தி ரெட் பலூன்'** திரைப்படம் திரையிடப்படும் இந்த படம் **பிரெஞ்சு மொழியில் ஆஸ்கார் விருது** பெற்ற குறும்படம் ஆகும்.

## மத்திய செய்திகள்

### 1. உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திர சூட்

- உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்க மூத்த நீதிபதி **டி.ஒய்.சந்திர சூட்டின்** பெயரை தற்போதைய தலைமை நீதிபதி யு.யு.லலித் மத்திய அரசுக்கு பரிந்துரைத்தார்.
- இந்த பரிந்துரை கடிதத்தின் நகலை உச்ச நீதிமன்றத்தின் ஐம்பதாவது நீதிபதியாக பதவியேற்க உள்ள நீதிபதி டி.ஒய்.சந்திர சூட்டிடம் தலைமை நீதிபதி யு.யு.லலித் அளித்தார்.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எட்டாம் தேதி ஓய்வு பெறுகிறார்.
- நவம்பர் 9ஆம் தேதி தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கும் டி.ஒய்.சந்திர சூட் **2024 நவம்பர் 10ஆம்** தேதி வரையில் இரண்டு ஆண்டுகள் அந்த பதவியை வகிக்க உள்ளார்.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பணி ஓய்வு **வயது 65** ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2016 மே 13ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதியாக டி.ஒய்.சந்திர சூட் பதவி உயர்வு பெற்றார்.
- அதற்கு முன்பு அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக 2013 **அக்டோபர் 31ம்** தேதி முதல் அவர் பணியாற்றி வந்தார்.
- 2000 மார்ச் 29 முதல் மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் அவர் பணியாற்றியுள்ளார்.
- 1998ல் மும்பை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்குரைஞரான அவர் அதே ஆண்டில் கூடுதல் **சொலிசிட்டர் ஜெனரலாகவும்** பதவி உயர்வு பெற்றார்.
- உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக 1978 பிப்ரவரி 22 முதல் 1985 ஜூலை 11 வரையில் நீண்ட காலம் பணியாற்றிய நீதிபதி சந்திர சூட்டின் மகன் நீதிபதி டி.ஒய்.சந்திர சூட் ஆவார்.

2. **இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 6.8 சதவீதமாக குறைத்தது ஐஎம்எஃப்**

- 2022-23 ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 8.2 சதவீதமாக இருக்கும் என்று கடந்த ஜனவரியில் ஐஎம்எஃப் கணித்திருந்தது.
- பின்னர் இது **7.4 சதவீதமாக** கடந்த ஜனவரியில் குறைக்கப்பட்டது.
- உலகவங்கி மற்றும் ஐஎம்எஃப் அதிகாரிகளின் வருடாந்திர கூட்டத்திற்கு பின் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீடு **6.8 சதவீதமாக** குறைக்கப்பட்டுள்ளது.
- கடந்த ஜூலை கணிப்புடன் ஒப்பிடுகையில் இது **0.6 சதவீதம்** குறைவாகும்.
- 2021-22 ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி **8.7 சதவீதமாக** இருந்தது.
- **உலக பொருளாதாரம் வளர்ச்சி மதிப்பீடு குறைப்பு:**
  - உலக பொருளாதார வளர்ச்சி 2021ல் 6.0 சதவீதமாக இருந்த நிலையில் 2022ல் **3.2%** ஆகவும் 2023 ல் 2.7 சதவீதமாகவும் குறையும் என்று ஐஎம்எஃப் அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - இக்கணிப்புகள், பெரும் பொருளாதார நாடுகளின் **(அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் , சீனா)** குறிப்பிடத்தக்க அளவிலான மந்தநிலையை எதிரொலிப்பதாக ஐஎம்எஃப் தெரிவித்துள்ளது.
  - உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு உலக பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையை தொடர்ந்து பாதித்து வருகிறது.
  - பணவீக்க அழுத்தம் நீட்டிப்பு மற்றும் அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள வாழ்க்கை செலவுகள் பிரச்சனை , கரோனா பரவல் மற்றும் தொடர் முடக்கங்களால் சீனாவில் நிலவும் மந்தநிலை ஆகியவற்றின் தாக்கங்களால் இந்த சவால்கள் எழுந்துள்ளன.
  - கடந்த 2021ல் **8.1 சதவீதமாக** இருந்த சீனாவின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு **3.2%** என்று ஐஎம்எஃப் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

3. **ஷிண்டே அணிக்கு இரண்டு வாள்கள் மற்றும் கேடயம்**

- மகாராஷ்டிரத்தில் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனை கூட்டணி ஆட்சியில் இருந்தது.
- அந்த கூட்டணி மீது சிவசேனையைச் சேர்ந்த **ஏக்நாத்** அதிருப்தி கொண்டதால் கட்சியில் பிளவு ஏற்பட்டது.
- சிவசேனையைச் சேர்ந்த **40 அதிருப்தி எம்எல்ஏக்கள்** ஏக்நாத் ஷிண்டேவுக்கு ஆதரவாளித்தனர்.
- இதையடுத்து உத்தவ் தாக்கரே தலைமையிலான அரசு கவிழ்ந்தது.
- எனினும் கட்சியின் பெயர் சின்னம் தொடர்பான பிரச்சனைக்கு தீர்வு ஏற்படாத நிலையில் அவற்றை தேர்தல் ஆணையம் முடக்கியது.

- இதையடுத்து உத்தவ் தாக்கரே அணிக்கு **'சிவசேனை உத்தவ் பாலா சாகிப் தாக்கரே'** என்ற பெயரையும், **'எரியும் ஜோதி'** சின்னத்தையும் தேர்தல் ஆணையம் ஒதுக்கியது.
- அதே வேளையில் ஷிண்டே அணிக்கு **'பாலா சாகேபின் சிவசேனை'** என்ற பெயரை வழங்கி இருந்த தேர்தல் ஆணையம் அந்த அணிக்கு இரண்டு வாள்கள் மற்றும் கேடயம் சின்னத்தை ஒதுக்கியது.
- இந்த சின்னம் **சத்திரபதி சிவாஜி** மற்றும் **பழைய சேனையின் சின்னம்** என்று ஷிண்டே பெருமிதம் தெரிவித்தார்.

## 4. லெபனனுடன் 'வரலாற்று' ஒப்பந்தம்: இஸ்ரேல்

- கடல் எல்லை பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தத்தை அண்டை நாடான லெபனானுடன் மேற்கொண்டுள்ளதாக **பிரதமர் யாயிர் லபீட்** அறிவித்துள்ளார்.
- மத்திய தரை கடலில் சுமார் **860 சதுர கிலோமீட்டர்** பரப்பளவு இஸ்ரேலும் லெபனானும் உரிமை கோரி வருகின்றன.
- இந்த நிலையில் அமெரிக்காவின் நீண்ட கால முயற்சிக்குப் பிறகு இந்த விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் உருவானது.
- அந்த ஒப்பந்தத்தின் கீழ் சர்ச்சைக்குரிய எல்லைக்குள் கடலடி எரிபொருளை எடுத்துக் கொள்ள **லெபனானை இஸ்ரேல்** அனுமதிக்கும்.